செ.வெ.எண்:341 நாள்:27.06.2022

# திருநெல்வேலி மாவட்டம்

## போதைப் பொருட்கள் பயன்படுத்துதல் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், போதைப் பொருட்கள் பயன்படுத்துதல் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டம், அனைத்து பள்ளிகளையும் ஒருங்கிணைத்து காணொலி காட்சி வாயிலாக பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.06.2022) நடைபெற்றது.

போதை பொருள் பயன்படுத்துதல் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ மாணவிகள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் போதை பொருள் பயன்பாட்டிற்கெதிராக உறுதிமொழி ஏற்றுள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

இந்திய அளவிலும், தமிழ்நாடு அளவிலும், போதை பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் போதைப் பொருட்கள் கடத்தல் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து பள்ளி, கல்லூரி மாணவ.மாணவியர்களிடையே போதைப் பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மின்னனு விளம்பர போட்டி இன்று அறிமுகபடுத்தப்பட்டுள்ளது. “Say No to Drug and Yes to Life” அல்லது “Drug Free India” என்ற தலைப்பில் டிஜிட்டல் போஸ்டர் தயார் செய்வதற்கான பல்வேறு மாதிரி படைப்புகள் பள்ளி குழந்தைகள், கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள் ஆகியோர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது. அம்மாதிரிகளை பள்ளி குழந்தைகள் அவர்களது பள்ளிகள் வழியாகவும், கல்லூரி மாணவ மாணவிகள் அவர்களது கல்லூரி வழியாகவும் பொதுமக்கள drugfreetirunelveli2022@gamil.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, 32-33 A (1) இராஜராஜேஸ்வரி நகர்,

(மாலா மெடிக்கல் சென்டர் காம்பளக்ஸ்) திருநெல்வேலி - 7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படியும் அவற்றில் சிறந்த படைப்புகளுக்கு முதல் பரிசாக ரூ. 5000 எனவும், இரண்டாவது பரிசாக ரூ. 3000 எனவும், மூன்றாவது பரிசாக ரூ.2000 எனவும் வழங்கப்பட உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 318 பள்ளி மாணவ, மாணவியர்கள் காணொலி மூலம் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் போதைப்பொருட்கள் பயன்படுத்துவதால், தீமைகள் ஏற்படும் குறித்து உளவியல் ரீதியாகவும், மாணவர்களுக்கு பல்வேறு விழிப்பணர்வு ஏற்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியில் நேரடியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 100 பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.மிதமுள்ள மாணவர்கள் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரி போதைப் பொருட்கள் தொடர்பான தடுப்பு நடவடிக்கை குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படவுள்ளது. போதைப்பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் காவல்துறையின் மூலம் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி அருகில் போதைப் பொருட்கள் விற்பனை செய்தால் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், போதைப் பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இலவச தொலைபேசி எண் 1098, 14446ஆகிய எண்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மாநகர துணை காவல் ஆணையர்கள் திரு.சரவணகுமார், திரு.ஸ்ரீனிவாசன், திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம், சைல்டுலைன் இயக்குநர், மைய ஒருங்கிணைப்பாளர் திரு.சந்திரகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலபிரிவு) திரு.ஷேக் ஆயுப், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உளவியல் துறை துணை பேராசிரியர் திரு.டி.யுவராஜ், சதக் அப்துல்லா அப்பா கல்லூரி உளவியல் துறை தலைவர் திருமதி. எஸ்.ஸ்ரீநிதி, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திருமதி.அருட்செல்வி, தேசிய தகவல் மைய மேலாளர்கள் திரு.ஆறுமுக நயினார், திரு.தேவராஜன், மற்றும் துணை பேராசிரியர் உட்பட அரசு அலுவலர்கள், பலர் கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**